பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

மங்கள வைபவமா?
நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
ராஜ்கோபால்ஸ்
(பட்டுச் சேலைகளின்
காட்சியகம்)
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2.50

ஜவுளி வியாபாரிகளுக்கு
ஓர் நற்செய்தி!
பூகொட
தயாரிப்புக்களின்
பிடவைத்தினுசுகளுக்கு
வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள்
ராஜ்கோபால்ஸ்
பூகொட மொத்த,
சில்லறை விற்பனையாளர்கள்
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுடர் 4 விபவ ஞு பங்குனி மீ 02 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 06 (15 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-85

# ஜே.வி.பிக்கு எதிராக கடும் நடவடிக்கை

## தேடி அழிக்கும் முறையை முடுக்கிவிட அரசு முஸ்தீபு

கொழும்பு, மார்ச். 15

தென்பகுதியில் வன்செயல்களில் ஈடுபட்டுவரும் ஜே. வி. பி. தீவிரவாதிகளுக்கு எதிராக மேலும் கடும் நடவடிக்கைகள் பலவற்றை எடுப்பதற்கு இலங்கை அரசு முடிவு செய்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பாதுகாப்புப் படையினரைக் கொண்டு தீவிரவாதிகளை தேடி அழிக்கும் முறையை முழுஅளவில் முடுக்கிவிடுவதற்கு அரசு திட்டமிட்டிருப்பதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை அடுத்து கடந்த ஏழாம் திகதி முதல் படையினர் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 500 பேர் விசாரணைகளுக்காக படையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் —

அவர்களில் சுமார் ஐநூறு பேர் வரை தீவிரவாத சந்தேக நபர்களாகக் கருதப்பட்டு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதாகவும் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## 4 கோட்டக்கல்வி பிரிவுகள் ஏப்ரல் முதல் இயங்கும்

யாழ்-மாவட்டத்தில்நான்கு கோட்டக்கல்வி பிரிவுகள் ஏப்ரல் முதலாம் திகதிமுதல் இயங்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

நல்லூர், பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, மருதனுமடம் ஆகிய இடங்களில் இக்கோட்டக் கல்வி அலுவலகங்கள் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கோட்டக்கல்வி அலுவலகங்களை அமைப்பது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (உ-10)

## பிறப்புச் சான்றிதழ் பெற இன்று முதல் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்-செயலகத்தில் இன்று முதல் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ். செயலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

கடந்த வருடம் வழங்கப்படாமல் தேங்கிக்கிடந்த சுமார் 12 ஆயிரத்திற்கும் அதிகமான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பப்படிவங்களைக் கவனித்து அவற்றை வழங்குவதற்காக கடந்த ஜனவரி 31ஆம் திகதி தொடக்கம் புதிய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

தேங்கிக் கிடந்த விண்ணப்பங்களில் ஓரளவு கணிசமான தொகையை பரிசிலித்து அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## 2ஆம் கட்ட நிவாரணம்; புதிய படிவம் தேவையில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 15

இரண்டாம்கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணமான ஆயிரம் ரூபாவைப் பெறுவதற்கு புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

யாழ் செயலக வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன.

இரண்டாம் கட்ட மீளக் குடியமர்தல் நிவாரணம் ஆயிரம் ரூபாவை விரைவில் கொடுத்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல்கட்ட நிவாரணப் பணம் வழங்கும்பொழுது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை உபயோகித்தே இரண்டாம் கட்ட நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளது. (ஓ-5)

## யாழ். கலட்டிப் பகுதியில் நேற்று பலத்த தேடுதல்

யாழ்ப்பாணம், மார்ச் 51

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி, கலட்டிப் பகுதியில் நேற்று இந்திய அமைதிப் படையினர் பலத்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இப் பகுதியில் இடம்பெற்ற சம்பவமொன்றில் இளைஞர் ஒருவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது,

அதனையடுத்து திங்கள் இரவு இப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகங்களும் இடம்பெற்றன.

பொதுமக்கள் இப்பாதையூடாகச் செல்வதற்கும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது, (உ-10)

## காரைநகர், அரியாலையில் நேற்று இரு இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 15

காரைநகரிலும், அரியாலையிலும் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு இருசம்பவங்களில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

நேற்றுமாலை 4.45 மணியளவில் காரைநகர் வலந்தலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவமொன்றில் செபமாலை செபஸ்தியாம்பிள்ளை என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் இருவர் இச்சம்பவத்தில் உயிரிழந்ததாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

புங்கங்குளம் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் அரியாலையைச் சேர்ந்த நவரட்ணம் நவநீதன் (வயது 17) என்ற இளைஞர் உயிரிழந்தார். மயில்வாகனம் கமலாதேவி (வயது 41) என்ற பெண்மணி காயமடைந்தார்.

மேற்படிசம்பவங்களில்உயிரிழந்தசெபமாலை செபஸ்தியாம்பிள்ளை, ந. நவநீதன் ஆகியோரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை கொக்குவில் மற்றும் கோண்டாவில் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களில் மேலும் சில இளைஞர்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அச்செய்தியை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (உ-9-10)

## பஸ்ஸில் சூடுபட்ட பயணி ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பஸ்ஸில் சூடுபட்ட பஸ் பிரயாணி நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

மட்டுவிலைச் சேர்ந்த என். பாலசிங்கம் (வயது 31) என்பவரே மரணமானவராவார்.

இவர் கடந்த 12 ஆம் திகதி உருத்திரபுரத்திலிருந்து யாழ்ப்பாணம்நோக்கி பஸ்ஸில் வந்து கொண்டிருந்த பொழுது பஸ்ஸில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். (உ-10)

சுன்னுகம், வடமராட்சிப் பகுதி

## அடகு நகைகள் யாழ் வந்தன; 22 முதல் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மக்கள் வங்கியின் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சுன்னுகம் ஆகிய கிளைகளில் அடகு வைத்தோரின் நகைகள் நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் இத்தகவலைத் தெரிவித்தார்,

மேற்படி நான்கு வங்கிக் கிளைகளிலும் அடகு வைத்த ஆயிரத்து 500 தொகுதி நகைகள் நேற்று இங்கு கொண்டு வரப்பட்டன.

எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமையில் இருந்து இந்த நகைகள் உரியவர்களுக்கு மீளளிக்கப்படவுள்ளன.

நெல்லியடி, பருத்தித்துறை வல்வெட்டித்துறைக் கிளைகளில் அடகு வைத்தோருக்கு நெல்லியடிக் கிளையிலும்—

சுன்னுகம் கிளையில் அடகு வைத்தோருக்கு சுன்னுகம் கிளையிலும் வைத்து நகைகள் மீளளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ 5)

### மார்ச் மாத பென்ஷன்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மார்ச் மாதப் பென்ஷன் வவுச்சர்களும், காசோலைகளும் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-5)

## இந்தியாவிற்கான தூதராக நிஸங்க நியமனமாவார்?

கொழும்பு, மார்ச் 15

இந்தியாவுக்கான புதிய இலங்கைத் தூதராக முன்னுள் கல்வி, நீதி அமைச்சராகப் பணியாற்றிய டாக்டர் நிசங்க விஜயரத்ன நியமிக்கப்படலாம்.

இது குறித்து அரச மேலிடம் ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது.

இந்திய மத்திய அரசுத் தலைவர்கள், பிரமுகர்களுடன் சுமுக உறவும் புரிந்துணர்வும் கொண்டவராக டாக்டர் விஜயரத்ன அரச வட்டாரங்களில் கருதப்படுகிறுர்.

புதுடில்லியுடன் முக்கிய பிரச்சினைகளைப்பற்றிப் பேச அவரே பொருத்தமானவர் என்று அரச வட்டாரங்கள் கருதுகின்றன.

புதுடில்லியில் இலங்கைத் தூதராகப் பணியாற்றிய திரு. பெர்னுட் திலகரத்ன வெளியுறவு அமைச்சுச் செயலாளர் பதவியை ஏற்க கொழும்பு திரும்பிவிட்டார். (ஓ-எ)

### சுபநேரம்

15 - 03 - 1989
பங்குனி- 02
புதன்கிழமை

சுபநேரம்:
04 - 51 முதல் 06 - 21 வரை
ராகுகாலம்:
12 - 21 முதல் 01 - 51 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
அட்டமி முற்பகல் 9.20 வரை

### 17 பேர் பலி

கௌஹாத்தி, மார்ச் 15

அஸாம் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் 17 பேர் உயிரிழந்தனர். (உ-எ)

## 'டை'யுடன் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மாவட்ட அரச அலுவலக உத்தியோகத்தர்கள் 'டை' அணிந்து கடமையில் ஈடுபடத்தொடங்கியுள்ளனர்.

யாழ். சுகாதாரத் திணைக்களம், போதனு வைத்திய சாலை ஆகியவற்றில்ஏற்கனவே இத் திட்டம் அமுலாகியுள்ளது.

யாழ். செயலகத்தில் இது நேற்று முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. (உ-10)

## 3 ஆண்டுகளில் 4,000 பெண்கள் சீதனக் கொடுமையினுல் பலி!

### இந்தியாவில் கொடூர நிலைமை

புதுடில்லி, மார்ச் 15

கடந்த மூன்று ஆண்டுகளில் சீதனக் கொடுமையால் 4 ஆயிரத்திற்கும் அதிகமான இளம் பெண்கள் இந்தியாவில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

சீதனம் போதியளவு கொண்டுவராததற்காக 50 இளம் பெண்கள் கடந்த ஆண்டு ஆகஸ்டில் இருந்து இந்த ஆண்டு ஜனவரி வரையுள்ள காலப் பகுதியில் புதுடில்லியில் மட்டும் கொல்லப்பட்டனர்.

இத்தகவலை உள்துறை அமைச்சர் பி. சிதம்பரம் லோக சபையில் வெளியிட்டார்.

இந்தியாவில் சீதனம் வாங்குவது 1961 ஆம் ஆண்டு முதல் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டு உள்ளது. [ஓ-எ]

## புதிய அரசாங்கத்தின் முதலாவது பட்ஜெட் இன்று

கொழும்பு, மார்ச் 15

ஜனுதிபதி பிரேமதாஸ தலைமையிலான அரசின் சார்பில் முதலாவது வரவுசெலவுத் திட்டம் இன்று புதன் பிற்பகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க இன்று வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பார்.

துண்டு விழும் 5 ஆயிரம் கோடி ரூபா தொகையை அரசு எப்படிச் சேகரிக்கும் என்ற விவரங்கள் அடங்கிய உரையை திரு. விஜேதுங்கா நாளை (வியாழன்) நாடாளுமன்றத்தில் நிகழ்த்துவார்.

வரவுசெலவுத் திட்டம் சுமார் 10ஆயிரத்து 500கோடி ரூபாவாக இருக்கும். இதில் வருமானம் சுமார் 5 ஆயிரத்து 500 கோடி ரூபா.

பாதுகாப்புச் செலவினத்துக்கு 600 கோடி ரூபா ஒதுக்கப்படும். வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு சுமார் ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்படும்.

—இத்தகவலை நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## வவுனியாவில் திங்கள் மாலை இளைஞர் சுட்டுக் கொலை

கடந்த திங்களன்று மாலை 5-30 மணியளவில் வவுனியா கதிரேசு வீதியில் வைத்து இளைஞர்ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வவுனியா இறம்பைக் குளத்தைச் சேர்ந்த ஜூட் நிரஞ்சன் (26 வயது) என்ற இவ் இளைஞரது சடலம் வவுனியா பொலீஸாரினுல் அன்றிரவே ஒப்படைக்கப்பட்டது.

இவர் புளொட் இயக்க உறுப்பினர் என்றும் தெரிய வருகிறது. (ஓ-164)

## ★ செய்திச் சரம் ★

### வெடி மருந்துகள் மீட்கப்பட்டன

கொழும்பு, மார்ச் 15

கண்டி ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் இருந்து பெருந்தொகையான வெடிப் பொருள்களை ஆயுதப் படையினர் மீட்டனர். (உ)

### புதிய முகாம்

மாங்குளம், மார்ச் 15

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியில் சமனன்குளம் பகுதியில் இந்திய இராணுவத்தினர் புதிய முகாமொன்றை அமைத்துள்ளனர். (ஓ-94)

### முச்சந்தி முரளி



எந்த நாடு எண்டாலும் என்ன சட்ட திட்டங்கள் வந்தாலும் உந்தச் சீதனப் பேயை ஒழிக்க ஏலாது பாருங்கோ.........!

### தொண்டமானுறில் தேடுதல்

வல்வெட்டித்துறை, மார்ச் 15

தொண்டமானுறு பகுதியில் நேற்றுக் காலை 6 மணிமுதல் நண்பகல் வரை சுற்றி வளைப்பும், தேடுதலும் இடம்பெற்றன.

தேடுதலின் போது கைதான பல வாலிபர்கள் அரசடி என்ற இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர். (உ-160)

### ராஜீவுடன் இன்று பேச்சு

புதுடில்லியில் தங்கி நிற்கும் வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை இன்று சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிக்கப் படுகிறது. (உ)

### பொலிகண்டியில் வேட்டுச் சத்தம்

வல்வெட்டித்துறை, மார்ச் 15

பொலிகண்டி இராணுவ முகாம் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

இதன் பின்னர் அப் பகுதியில் பரவலாகத் தேடுதல் வேட்டையும் இடம்பெற்றது.

படையினரின் பாதுகாப்பில் இருந்து சில இளைஞர்கள் தப்பி ஓடியபோதே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (உ-160)

### தாக்குதல்

பசிலைப்பள்ளி, மார்ச் 15

மட்டுவில், கனகன்புளியடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் லொறியில் வந்த சிலர் அமைதிப்படைமீது தாக்குதல் நடத்தினர்.

அமைதிப்படை தரப்பில் சிலருக்குக் காயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து ஷெல் தாக்குதலும் பரவலான துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இதனுல் மட்டுவில்வடக்கு, சரசாலைப் பகுதி மக்கள் அன்றைய இரவைப் பீதியுடன் கழித்தனர். (ஓ-117)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

C 50, Chaly CF 50, GS 125, CB 250, Racoon 50 மோட்டார் சைக்கிள்களும், கோயில்களுக்குத் தேவையான பட்டுக்குடைகள், பூசைமணி, பெரிய மணி, கிடாரம், திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, கும்பத்துக்குரிய செம்பு வகைகள், சருவம், குடம், தீபம், தூபம், எவர்சில்வர் அலுமினியம், பித்தளைப் பொருள்கள், விளையாட்டுப் பரிசுக் கிண்ணங்கள், கேடயங்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். லம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ், 297, K. K. S றோட், யாழ்ப்பாணம். [9946]

புதிய ரக Chaly விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: துர்க்கை அம்மன் கோயில், நுணுவில் மேற்கு, சாவகச்சேரி. (9851)

ஆண், பெண் இரண்டு பொமெறியன் நாய்க்குட்டி உடன் விற்பனைக்கு உண்டு. ஒஸ்ரின் கார் E N விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. தியாகராஜா, 16, விநாயகர் வீதி, கண்டுக்குளி. (9854)

ட்ரெயிலர் [Trail r] விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற், யாழ்ப்பாணம். (C/1888)

பாவித்த சகல வீட்டுத் தளபாடங்கள் Sh w Case T. V. குளிர்சாதனப்பெட்டி, தையல் மெஷின், கசற் றேடியோ, செற்றி, மேசைகள், pram, சிறிய கார், Cot சைக்கிள், Office மேசை, கட்டில் மற்றும் பல உடன் விற்பனைக்கு உண்டு. ந ராஜா, குருக்கள் மடம் வீரகாளி அம்மன் கோயில் வளவு, நல்லூர். (9853)

## காணி விற்பனைக்கு உண்டு

டவுனிலிருந்து அரைமைல் தூரத்தில் மாநகரசபை எல்லைக்குள் ஓட்டுமடச் சந்திக்கும் பிரப்பங்குளச் சந்திக்குமிடையில் 1 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு, விபரங்களுக்கு: 192, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [10052]

## ஆங்கில புத்தகம்

ஆரம்பம் முதல் G. C. E (O/L) வரை இலக்கணம், பேச்சுப்பயிற்சி, அப்பியாசம் முதலியவற்றை உள்ளடக்கிய புதுமையான முறையில் T. இராஜலிங்கம் என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகம்: BASIC GRAMMAR AND SPOKEN PRACTIC-AL; கிடைக்கும் இடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். (9814)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், குப்குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம்செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1771)

allur F rm entre Prime L hman வெள்ளை, சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Golden omet சிவப்புப்பேட்டுக்குஞ்சுகள், Hy-line கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/1770)

## UPLANDS FARM

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுண் சேவல்குஞ்சு விலை ரூ 4. 50 (15- 3- 89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். மொத்தமாக வாங்கி விநியோகிக்கும் வியாபாரிகளுக்கும் பாம்காரர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு. முன் கூட்டியே பதிவு செய்யவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம், (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (9925)

## கோழிக்குஞ்சு விநியோகம்

UPLANDS FARM

கறுப்பு (பிலிமத்) வரிச் சேவல் குஞ்சு (16- 3- 89) வியாழக்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9944)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் 15 ஆந் திகதி புதன் கிழமையும், Bairaha Farm புரொயிலர்குஞ்சுகள், பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 16 ஆந் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9939)

## தவறிவிட்டது

11- 03- 89 அன்று நேவிஸ் யோசேப்ஸ்ரனிஸ் அல்லது யோசேப் ஆகிய எனது அடையாள அட்டை இல. 630653959 V புதுக்குடியிருப்புக்கும் ஆனந்தபுரத்துக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றேன். நே. யோ. ஸ்ரனிஸ், C/o யோ நேவிஸ், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. [10055]

கிருஷ்ணசாமி குருக்கள் கௌரி ஆகிய எனது அடையாள அட்டை யாழ். பஸ் நிலையத்தில் 10- 03- 89இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் அல்லது ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தானம் ஊரெழுவில் ஒப்படைக்கவும். (9859)

ராஜரெட்ணம் சற்குணநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இலக்கம் 380821389X மூக்குக் கண்ணாடியுடன் அரசடிச் சந்தியருகில் 14- 3- 89இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து 251, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [9856]

## காணவில்லை

அடையாள அட்டை இல: 393200081 V 47, நொறிஸ் றோட், கொழும்பு 11, விலாசமுள்ளது. காரைநகர்/ யாழ் 784 பஸ் பிரயாணத்தில் தவறியுள்ளது. 16, கிறவுண் பஜார் யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்தால் சன்மானம். [10054]

## தேவை

புளொக் வேலை பழகுவதற்கு பயிற்சியாளர்கள் தேவை. ஆர்ட் கிராபிக்ஸ், 538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/ 1926)

யாழ் நகரில் உள்ள எமது கிளை ஸ்தாபனத்துக்கு T V Deck, Radio, Motor winding போன்ற வேலைகட்கு வெற்றிடம் உள்ளது. தொடர்பு முகவரி: ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல. 44, 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (9947)

A/L Chemistry படிப்பிப்பதற்கும் G. A. Q. வகுப்புக்கு Political, Science, Tamil படிப்பிப்பதற்கும் விரிவுரையாளர்கள் தேவை. உடனடியாக நேரில் வரவும். யாழ்ப்பாணக் கல்வி நிலையம், யாழ்ப்பாணம் சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில். (9949)

ஆங்கில அச்சுக்கோர்ப்பாளர்கள் (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) பிளேட்டின் மெஷின் மைண்டர்கள் தேவை நேரில் வரவும். செட்டியார் அச்சகம், 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C 1879)

## மணப் பெண் தேவை

யாழ்ப்பாண வேளாளர் இந்து சமயத்தைச் சார்ந்த மாதம் 6000/- சம்பாதிக்கும் ஒருவருக்கு மறுவிவாகஞ் செய்ய படித்த பண்புள்ள பெண் தேவை. சீதனம் வசதி போல் கொடுக்கலாம். வயது 35 க்கு உட்பட்டவர்கள் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கலாம். Sapphire Jewellers No. 224/2, Kasthuriar Rd. Jaffna (9950)

## கல்வி A/L - 1991

தூய, பிரயோக கணித வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. அண்மையில் O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவு, வெள்ளி 17- 3- 89 பி. ப. 4.15இற்கு ஆரம்பம். ஆசிரியர் திரு. சி. துரையப்பா, கொட்டடிச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். (10051)

பௌதிகவியல் தூய/பிரயோக கணிதம் A/L 90- 20- 3- 89 திங்கட்கிழமையும், A/L 91 17- 3- 89 வெள்ளிக்கிழமையும்ஆரம்பமாகின்றது. அனுபவமுள்ள இரு பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். 132/2, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (9837)

## A/L 91 இரசாயனம்

108, Brown Road A/L 91 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: (16-3-89) வியாழன் 6. 30 a. m - செவ்வாய், வியாழன் 6 30 a. m. (10057)

## A/L 91 இரசாயனம்

108 Brown Road Jaffna A/L 91 ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்:- 19-03 89 ஞாயிறு 11 a.m, சனி, ஞாயிறு 11a.m பெயர்களைப் பதிவு செய்யவும். அசேதன இரசாயனம் பகுதி I நூல் 17- 03- 89 இல் வெளியாகும். [10056]

## சேவை

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே! தங்களால் திருத்துவதற்காகத் தரப்பட்டு இற்றைவரை மீளப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கும் பணிக்கூடுகளை [1987/ 88ஆம் ஆண்டுக்கு மட்டும் உரியவற்றைக்] காலம் தாழ்த்தாது 1- 5- 89க்கு முன்னர் வந்து பெற்றுக்கொள்ளவும். நன்றி. நிர்வாகம் ரதி வோச் வேக்ஸ். [9948]

## RAJZ BRAND தயாரிப்புகள்

இல்லத்தரசிகளே! Gas அடுப்பிலோ, மின் அடுப்பிலோ சமைப்பதற்கேற்ற கண்ணைக் கவரும் பல்வகை தரமான எவர்சில்வர் பாத்திரங்களுக்கு தவறுமல் நாடுங்கள்: "Rajz Brand" எங்கும் விற்பனையாகின்றன. பல விதமான அளவுகளிலும் டிசைன்களிலும் அடுக்குச் சட்டிகள், தாச்சிகள் Frying Panகள் இன்னும் பல காட்சி அறை S.A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C1898)

## TYPE WRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

## NEW CITY TRADERS

சகல விதமான T V டெக், ரேடியோ, அன்ரனா பூஸ்ரர் வயர் பைப்செற், T D K Maxell Audio Vidio கசற், வீட்டுக்குத் தேவையான மணிக்கூடு, சிறுவர் விளையாட்டுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளச் சிறந்த ஸ்தாபனம்: New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C1839)

## மகளிருக்குரிய அலங்கார மனையியல் கற்கை நெறிகள்

வழக்கமாக நடைபெறும் வகுப்புகள் உடை தைத்தல், கேக்வகை தயாரித்தல், மணமகள் உடையலங்காரம், சிகை அலங்காரம், மனை அலங்காரம் மற்றும் பல தரப்பட்ட கை நுணுக்க வேலைகள் தொடர்ந்து நடைபெறும். தொடர்பு கொள்க: நிர்வாகி, அனிற்ரு அழகியற்கலை நிலையம், பூநாறி மரத்தடி, Anita School, K.K.S Road, Kokuvil. (10053)

---

## THE JAFFNA EDUCATION CENTRE

**யாழ்ப்பாணக் கல்வி நிலையம் யாழ்ப்பாணம்**

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

வருடம் 6, 7, 8, 9, 10, O/L, A/L ஆகிய வகுப்புக்களும்

**"Spoken English" Short-Hand and Typing**

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும்

G. A. Q. ஆகிய வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியும் அளிக்கப்படும். (10000)

---

## ★ கொம்பியூட்டர் பயிற்சி ★

**Diploma in Data Processing & Computer Programming Course**

BASIC 17-3-89 (Mon & Fri)
(MODULE - III) 9.00 a m

COBOL 18-03-89 (Sat & Sun)
10 00 a.m

1st Payment: Rs. 400/-

✶ மல்லாகம் கிளையில் 17-3-89 (3-30p.m) இற்கு நடைபெறும்.

**IDP Computer Centre**
342, K. K. S Road,
JAFFNA.
(சிவன் கோயிலடி)

Branch: 7th Mile post, K. K. S. Road, JAFFNA. [C-1919]

---

## ★ கீன் ★

திருநெல்வேலி

# A/L 91 கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | S. S. மனோகரன் |
| வர்த்தகம் | — | ஜெ. ராமன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| தமிழ் | — | குழந்தை |
| இந்து நாகரிகம் | — | காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | இக்னேசியஸ் |
| அரசியல் | — | நாகராசா |

**ஆரம்பம்: 20 - 03 - 1989**
திங்கள் மாலை 4 மணி [C-1922]

---

**எமது நேற்றைய புதிய வெளியீடு**

(1) ✶ ரஜனி ✶ ராதா ✶ நதியா நடித்த

**ராஜாதி ராஜா**

**எமது இன்றைய புதிய வெளியீடு**

(2) ✶ அர்ஜுன் ✶ சீதா ✶ நிழல்கள் ரவி ✶ S. சந்திரன் நடித்த

**வேட்டையாடு விளையாடு**
[ஒறிஜினல்]

**எமது நாளைய புதிய வெளியீடு**

(3) ★ சத்யராஜின்

**★ தாய் நாடு ★**
(Pyramid ஒறிஜினல்)

# உஷா சினிமா


162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [9857]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அழிப்பு: 1989 02 12







**திருமதி செ. அன்னபூரணம்**
படைப்பு: 1934 - 10 - 11

அன்பு அம்மா! எத்தனைகோடி
ஆண்டு சென்றாலும் -
அணையாத விளக்காய்
எமது உள்ளத்தில் ஒளி வீசும்
உங்கள் இனிய முகம் எங்கள்
உள்ளத்தை விட்டகலா.

உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
அன்புக்கணவர், பிள்ளைகள்.

**கு. றஜீகரன்**
படைப்பு: 15-03-1987

முப்பத்தொரு நாட்கள்
சென்றதடா - ரஜீ
எம் வீட்டு ஒளி விளக்கு அணைந்ததடா!
எம் இல்லம் இருள் சூழ்ந்து விட்டதடா?
அன்பு மொழி பேசி
அணைத்திட்ட நாட்கள்
வெறுங் கனவாக
பிஞ்சு முகம் காணாது - உன்
மழலை மொழி கேளாமல்
பேதலித்து நிற்கின்றோம்.

எங்கள் நெஞ்சில் என்றும் அணையாத சுடராக ஒளி வீச பிரார்த்திக்கும்
அன்புப்பெற்றோர், உறவினர்.

**செ. கலாரஜனி**
படைப்பு: 1966 - 07 - 05

ஆயிரம் கூடுகள் தனைக் கட்டி
ஆசையுடன் வளர்த்தோம் -
இருபத்து மூன்று வயது
தனைக் காணாமல்
இறைவனடி சேர்ந்தாயோ.

உன் பிரிவுத்துயரில் வாடும்
அப்பா, சகோதரர்கள்.

பிறவுன், வெட்டித்துறை. [9858]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஒரே நேரத்தில் பல கமெராக்களுடன்
நவீன மிக்ஷரின் உதவியுடன்
பல கோணங்களில் மனங்கவரும்
வண்ணம் - அழகு வர்ணத்தில்
✶ வீடியோ படம் பிடிப்பதற்கு ✶

யூனிபெக்ஸ் வீடியோ
UNIPEX VIDEO
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
(சிவகாமி அம்மன் கோயில் அருகாமை)
[C-1911]



## காணவில்லை

நச்சிரேன்வீதி அல்வாய் வடக்கைச்சேர்ந்த செல்வராசா நிர்மலா அவர்களின் சங்கிலி 3, மோதிரம் 3, காப்பு 3, டிஸ்கோ தோடு 1 சோடி, அத்துடன் பணம் 3450/- இந்திய இராணுவத்தினால், வியாபாரிமூலை வீரபத்திர ஆலயத்தில் 10-3-89 வெள்ளிக்கிழமை நடத்திய கூட்டத்தில் தவறிவிட்டது. இதனைக் கண்டு எடுத்தோர் உரியவர்களிடம் ஒப்படைக்கவும். அவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

உரிமையாளர்:
செ. செல்வராசா.
[10002]



## 89 - விஞ்ஞான மாணவர்கட்கு

காந்த விளைவுகள்
ஆரம்பம்: 18- 03- 1989
SAT - SUN 3 - 4
ஆசிரியர் MR. ரவிந்திரநாதன் B. Sc.
3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(C/1913)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

— யாழ்ப்பாணப் பிரிவு —

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 19-03-1989 காலை 9 மணியளவில் (யாழ்ப்பாணம் அர்ச். சம்பத்திரிசியார் கல்லூரி [St. Patricks College] மண்டபத்தில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகமளிக்கவும். (அழைப்பிதழ் இரு வாரங்களுக்கு முன்னதாக அனுப்பப்பட்டுள்ளது) அங்கத்துவப் பத்திரம் மூலம் கூட்டத்திற்கு அனுமதி வழங்கப்படும்.

— கௌரவ செயலாளர்
[C/1645]



பிரயோக கணிதப் பயிற்சி நூல் வெளியீடு!
வெள்ளிக்கிழமை

## நிலையியல் பகுதி - 1
(புதிய பாடத்திட்டம்)

ஆசிரியர் சி. துரையப்பா
ST. JOHN'S COLLEGE
(10005)



## A/L - 91ஆம் ஆண்டு விஞ்ஞான மாணவர்கட்கு

இரசாயனவியல்
ஆரம்பம்: 18-03-1989
SAT - SUN — 3-4 p. m
ஆசிரியர் MR. நாகரட்னம் B. Sc
மணல்தரை லேன், கந்தர்மடம்.
(C/1915)


# அத்துளு தண்ணீர் விநியோகம் சீரற்ற நிலையில்

கரவெட்டி, மார்ச் 15

கரவெட்டி அத்துளு தண்ணீர்த் தேக்கத் திட்டம் கடந்த சில வருடங்களாக குழப்பமான முறையில் நடைபெற்று வருகின்றது எனவும் தினமும் 4 மணி நேரம் விநியோகமாகும் நீர் தற்பொழுது 2 மணி நேரம் கூட விநியோகிக்கப் படுவதில்லை எனவும் இப்பகுதி மக்கள் குறைப்படுகின்றார்கள்.

மேலும், காலை 6 மணிக்கு திறந்துவிடப்பட வேண்டிய நீர் 7 மணிக்கே திறந்துவிடப்பட்டு 8 மணிக்கு முன்னதாக 7. 45 க்கு நிறுத்தப்பட்டு வருகின்றது எனவும் அறியவருகின்றது.

அத்துடன் நீர் விநியோகத்துக்குப் பொறுப்பான ஊழியர்கள் பழுதடைந்த குழாய்களைத் திருத்தாமல் விட்டதால் மக்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும் கரவெட்டி, கவுந்தில், பெரிய தோட்டம் சந்தி முதலிய பகுதிகளில் உள்ள மக்கள் இதனை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (க-70)

## 'செவன' கடன்

தாளையடி, மார்ச் 15

வடமராட்சி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் 'செவன' திட்டத்தின் கீழ் 63 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அப்பகுதியில் தெரிந்து எடுக்கப்பட்டவர்களுக்கு 'செவன' திட்டத்தின் கீழ் வீடு அமைப்பதற்கு ரூபா 7,500/- வரை கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இக் கடன் தொகை பகுதி பகுதியாக வழங்கப்படுகின்றது. (க-144)

## யாழ். இந்துவின் நூற்றாண்டு விழா நினைவாக நூலகம் அமைக்கத்திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

இவ்வருடம் அக்டோபர் மாதம் 23-ஆம் திகதி முதல் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் திகதி வரையான காலத்தில் எமது கல்லூரியின் நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும்

'இக்காலத்தில் நூற்றாண்டு விழா நினைவாக மிகப் பெரியளவிலான நூலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும்'.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப்பொதுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் தலைமைவகித்தார்.

நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டங்களுக்கு பெற்றோர்கள் பணத்தை மட்டும் கொடுத்துவிட்டு ஒதுங்கிக்கொள்ளாமல் அதனைச் செயற்படுத்துவதில் பூரண ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

இவ்வாறு அதிபர் திரு.எஸ். பொன்னம்பலம் தமது உரையின்போது கேட்டுக்கொண்டார்.

சங்கச் செயலாளர் திரு. இ. சங்கர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசியதாவது:-

எமது பழைய மாணவரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. மு. பஞ்சலிங்கம் அவர்களின் முயற்சியால் இருபாரிய கட்டடங்கள் இங்கு வேகமாகக் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றை நிறைவு செய்ய எமது சங்கம் ஐந்துலட்சம் ரூபாவைச் செலவுசெய்ய வேண்டும். புதிய நிர்வாகிகள் இதனைச் செய்து முடிக்க வேண்டும்.

அண்மையில் யாழ். ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகத்தினர் துப்புரவாக்கி மாணவர் பாவனைக்கேற்றதாக்கியுள்ளனர்.

இவர்கள் அனைவருக்கும் எமது சங்கம் நன்றியுடையதாகும்.

இப்படி அவர் கூறினார். (க-90)

# கிழக்கு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா 25 இல்

அம்பாறை, மார்ச் 15

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் திரு. கே. டி. அருட்பிரகாசம் தலைமையில் மட்டக்களப்பு (கல்லடி) விபுலானந்த இசை நடனக்கல்லூரி மண்டபத்தில் விழா நடைபெறும்.

இங்கிலாந்து சசெக்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி டி. ஆர். எம். வால்ட்டன் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

1981 ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் நடைபெறும் இந்த முதலாவது பட்டமளிப்புவிழாவின்போது, 160 பட்டதாரிகளுக்கு விஞ்ஞானப் பட்டங்களும், விவசாய, விஞ்ஞானப்பட்டங்களும் வழங்கப்படும்.

இதேவேளை அன்றைய தினம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளவிருக்கும் கலாநிதி வால்ட்டன், பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ஜனாப் எம். யூ. எள். சுல்தான் பாவா ஆகியோருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்களும் வழங்கப்படவுள்ளன.

விழாவில் பல வெளிநாட்டுத் தூதுவர்களும், பிரமுகர்களும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-14)

## முஸ்லிம் காங்கிரஸ் செயலகம்

அம்பாறை, மார்ச். 15

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் வாக்காளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த மாவட்டத்திலுள்ள சகல முஸ்லிம் கிராமங்களிலும் ஒவ்வொரு முஸ்லிம் காங்கிரஸ் செயலகம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (ச-14)

## துருப்பிடித்து இருக்கும் சமையல் யந்திரம்

வடமராட்சி மார்ச் 15

பெறுமதிமிக்க நீராவி சமையல் யந்திரங்கள் கடந்த பத்து ஆண்டுகளாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் துருப்பிடித்துக் கிடக்கின்றன.

இந்த இயந்திரம் 1979-ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் இவ் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டது.

இதில் ஏற்பட்டுள்ள பிழைகளைத் திருத்த உத்தியோகத்தர்களை உரிய காலங்களில் அரசாங்கம் அனுப்பாததினால் இவ் இயந்திரம் முழுதாகத் துருப்பிடித்துக் காணப்படுகிறது. (ச-160)

## கோரிக்கையால் பலனில்லை

மண்டைதீவு மார்ச் 15

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை மாணவர்கள் இடவசதியின்மையால் கஷ்டப்படுகின்றார்கள்.

மாணவர்களின் இடவசதியின்மையை நிவிர்த்தி செய்வதற்கு புதிய கட்டிடம் ஒன்றை அமைத்து உதவுமாறு வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் யாழ் கல்விப் பணிப்பாளரை பல தடவை கோரியிருந்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை எனத் தெரிகிறது. (ச-88)

# பட்டின முன்னேற்றத்துக்கு உழைப்பது எமது பணி

### வரியிறுப்பாளர் சங்கச் செயலாளர் உரை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பட்டினசபைகளோ, அபிவிருத்திச் சபைகளோ அல்லது பிரதேச சபைகளோ சீராக இயங்காத நிலையிலும் கூட மானிப்பாய் மக்களின் முன்னேற்றம் செயற்பாடுகள் தடைப்படாமல் பார்த்துக் கொள்வது எமது சங்கத்தின் முக்கிய பணியாகும். எமது பட்டினத்தில் 2360 பேர் வரி செலுத்துவோராய் இருந்தும் இச் சங்கத்தில் 91 பேர் அங்கத்தவராயிருப்பது வருத்தத்துக்குரியது. கூடிய அங்கத்தவர்கள் எமது சங்கத்தில் சேர்ந்து பட்டினத்தின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டும். செயலாளர் திரு. ந. விவேகானந்தராசா இவ்வாறு கூறினார். (க-90)

# புனர்வாழ்வுக் கொடுப்பனவு மாகாணசபை ஊடாகவே

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். மாவட்டத்திற்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணக் கொடுப்பனவுகள் யாவும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஊடாகவே மேற்கொள்ளப்படும்.

இதன்படி 1989 ஆம் ஆண்டிற்கான புனர்வாழ்வு, புனர்நிர்மாணக் கொடுப்பனவுகளுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற உயரதிகாரிகள் மாநாடு ஒன்றில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.


ஜனாதிபதியின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி மாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டார்கள்.

மாகாணசபை புனர்வாழ்வு, புனர்நிர்மாணப்பணிகளுக்குத் தேவையான நிதியைப் பெற்று, செயலகங்கள் ஊடாக அவற்றை சம்பந்தப்பட்டோருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். (ஒ-5)


## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)
O/L DAY CLASSES (OLD, NEW SYLLABUS) (8 30 - 1 30)
EVENING CLASSES (3.00 - 5.00)
ஆண்டுகள்: 10, 9, 8, 7, 6ஆம்
புதிய பிரிவு ஆரம்பம்:- 15 - 03 - 89.
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-
விஞ்ஞானம் - திரு. சூரி
ஆங்கிலம் - திரு விஸ்வநாதன்
கணிதம் - திரு. செல்வா
சமூகக்கல்வி - திரு. கருணாகரன், திரு சுந்தரமூர்த்தி
தமிழ், சமயம் - திரு: திருப்பதி
மு. கு:- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் செயற்படும் ஒரே நிறுவனம்.
[C/1855]





பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்
S-Lon The No.1 PVC pipe
உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகர
S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93718 - 9


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

J. M. J.

உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. அன்ரன் வழங்கும்**

மற்றும் ஒரு நற்செய்தி

**ஒரு வாரத்தில் விசாவுடன்**

**ஜேர்மனி**

**இத்தாலி** பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்

குறிப்பு:

எமது கந்தோரில் வேலை செய்ய அனுபவமான ஒரு கிளாக் தேவை. 25 வயதுக்கு மேற்பட்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**S. P. அன்ரன்**

**648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

(C/1826)

---

அஸ்ரன் ஆரம்பிக்கும்

## விசேட ஆங்கில வகுப்புகள்

★ "TOEFL" — அடுத்த பரீட்சைக்குரிய துரித பாட போதனை

★ G.C.E (O/L) — விசேட சித்தி (D) பெறுவதற்கான பயிற்சி வகுப்புகள்

யாழ்நகரின் முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை

**திரு. தவபாலன் (தெய்வர்) திரு. சபாநாயகம்**

**ஆரம்பம்: 25 - 03 - 1989 பிற்பகல் 1மணி**

- **TOEFL** முழுப்பாடத்திட்டத்தையும் உள்ளடக்கிய 4 மாத கற்கை நெறி.
- கட்டணம் ரூபா 450.00 (முழுப்பயிற்சிக்கும்)
- **G C. E. O/L** — மாதாந்தம் — கட்டணம் ரூபா 50.00

(1) இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.
(2) வினா — விடைப் பயிற்சிகள்.

தொடர்பு கொள்க:

**ASTAN INSTITUTE**

**166/1, HOSPITAL ROAD, JAFFNA.**

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)

(C/1892)

---

## முக்கிய அறிவித்தல்

யாழ்மாவட்ட மினிசினிமா சங்கத்தில் அங்கத்துவம் பெறாத பலர் ஆங்காங்கே கட்டணம் பெற்று சினிமா காட்டப்படுவதாக மினிசினிமா உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

எனவே மாவட்டத்தின் எந்தவொரு இடங்களிலும் அனுமதியில்லாமல் வீடியோ படம் காண்பிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுபவர்கள் மீது சங்கம் உரியமுறையில் நடவடிக்கை எடுக்கநேரிடும்.

தலைவர்:—
யா. மா. மி. சி. சங்கம்

(C/1647)

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 91**

**கலை, வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | இக்னேசியஸ் |
| அரசியல் | — | சுந்தரமூர்த்தி |

**ஆரம்பம்: 19-03-89**

**ஞாயிறு காலை 10.30**

(C/1095)

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**A/L கலை, வர்த்தகம்.**

**91** புதிய பிரிவு 1-4-89

**9.00 A. m.**

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | திரு. கலாகரன் | தமிழ் | திரு. குழந்தை |
| வர்த்தகம் | திரு. இலங்கா | இந்துநாகரிகம் | திரு. சுந்தரம்பிள்ளை |
| கணக்கியல் | திரு. வன்னியசிங்கம் | புவியியல் | திரு. குணராசா |
| அளவையியல் | திரு. சுப்பிரமணியம் | அரசியல் | திரு. மகேந்திரராஜா |

மு. கு: (1) மாணவர்கள் முன்கூட்டியே அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
(2) குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டும் அனுமதிகள் வழங்கப்படும்.

(C/1857)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**கனகன் - சத்திவேலாயுதம்**

**தோற்றம்:- 15-04-1962 மறைவு:- 13-02- 989**

காலனின் அழைப்பைக் கேட்டு
காவியமான நீ— எம்
கண்களை விட்டகன்று
மாதம் ஒன்றானாலும்— எம்
அகத்தினில் நீங்காத
நினைவுகளாய் உள்ளாய்!

உங்கள் நினைவால் வாடும்:
**குடும்பத்தினர்.**

சேணிபடி இமையாணன்,
உடுப்பிட்டி.
15 - 03 - 1989

(9676)

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில்:
07-05-1968

ஆண்டவன் மடியில்:
16-12-1988



**கனகரத்தினம் - மஞ்சுளாதேவி**

நஞ்சுண்டானே நீலகண்டன் தேவர்களைக் காக்க
நஞ்சுண்டாய் நீயோ சகோதரங்களைக் காக்க
கஞ்சத்தனமாய் உனக்கு ஆயுளைத் தந்து
பிஞ்சு வயதில் உன்னைப்பறித்த ஆண்டவனை நினைத்து
நெஞ்சமெல்லாம் பதறக் கதறி அழுகின்றோம்.
மஞ்சு! உன் நினைவில் நாளும் வாழுகின்றோம்.

சிநேகிதர், சிநேகிதிகள்


அல்வாய்.

(9849)

---

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி





**பொன்னம்பலம் குகதாஸ்** — பிறப்பு: 05 - 03 - 1959

**பொன்னம்பலம் வைத்தீஸ்வரன்** — பிறப்பு: 03 - 06 - 1965

**அழிப்பு: 20 - 03 - 1986**

**திதி: 15 - 03 - 1989**

வனமழித்து வளமாக்கி
வியர்வை தனை உரமாக்கி
மனை சிறக்க மனம்நிறைந்த
மருவிய ஈர் செல்வங்கள்
ஏங்க வைத்துச் சென்றனவோ?

எம் மனது தாங்குதில்லை!
இருளாய் மூவாண்டு
ஒளியின்றி ஓடினவோ?
ஆறுமோ எம் நெஞ்சு
ஐயா உம் நினைவு.

**பெற்றோர், உற்றார், உறவினர்கள்.**

[9971]

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:— 31- 10- 1936



உதிர்வு:- 07- 04- 1987

அமரர்

**சி. இராசரத்தினம் அவர்கள்**

**திதி: 15- 03- 1989**

எமது குடும்பத்தின் ஒளியாய், பாசத்தின் உறைவிடமாய், வழிகாட்டியாய் இருந்து வாழவைத்த தெய்வமே! அமரராகி ஆண்டு இரண்டாகினும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்,

**அன்புமனைவியும்**
**உறவினரும்**

''கன்னிகா பவனம்''
வல்வெட்டி.

(9780)

---

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



ஈழ மண்ணில்:-
30- 03- 1965

ஈழவர் இதயங்களில்:-
16- 03- 1987

**நடராசா - கமலநாதன்**
**(அப்பன், சிவா)**

ஈழ தேசத்தின் பிரளய காலத்தின்
வீரப் பிரசவமே! எங்கள் அப்பனே!!
ஊழித்தீ எம் மக்களை எரிக்கச்
சகிக்காது நீயும், அத்தீயில் சங்கமமானாய்
இரத்த சாட்சியமே! உனது இலட்சியங்கள்
யுக யுகாந்திரங்களுக்கு அழிந்து விடாது
இரத்த உறவுக்காரர்களும், இத் தலைமுறைத்
தோழர்களும் பௌதிக ரீதியான உனது
அஸ்தமனத்தின் இரண்டாவதாண்டில்
கண்ணீர் வடிக்கின்றோம்
நீ வாராயோ! என ஏங்கித் தவிக்கும்

அம்மா, அப்பா, அக்காமார்,
அத்தான்மார், அண்ணா, அண்ணி, வாணி,
தம்பி கண்ணன், மாமாமார், உறவினர்கள்,
தோழர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள்.

உரும்பராய்.

(9850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

**பொருள்:-**

உட்பகை உண்டாகி விட்ட குடும்பம் எவ்வளவு பலமுடையதாக இருந்தாலும் அரத்தால் தேய்க்கப்பட்ட இரும்பைப்போலச் சிறுகச் சிறுக ஒற்றுமை குறைந்து உடைந்து போகும்.


# உதயன்

இல. 292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
15.03.1989

தொலைபேசி 24805
22078
த.பெ.இல23


## அக்கரை ஆசை போக்க...

சொந்த நாட்டில் வாழ்ந்து கொண்டு அதன் உயர்ச்சிக்காக உழையுங்கள் என்ற குரல் ஒலித்திருக்கிறது.

வேலணையில், தனியார் கல்வி நிலையம் ஒன்றின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட மாணவர்களைப் பார்த்து இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. பாலச்சந்திரன் விடுத்த இந்த அழைப்பு மாணவர்களுக்கு மட்டுமன்றி, பொதுவாக எல்லா வயதினருக்குமே பொருந்தக் கூடியது.

ஏனெனில், தமிழர்களைப் பொறுத்த வரையில், இங்கு வாழ்பவர்களை விட வெளியே அக்கரைப் பச்சைகளை நாடி ஓடிப் பறப்பவர்களே அதிகம் என்று மதிப்பிடும் அளவுக்கு நிலைமை மோசமாகி உள்ளது.

வெளிநாடு செல்வதற்காகக் கடவுச் சீட்டுக்கு மனுச் செய்வதும், வீசாவுக்கு விண்ணப்பிப்பதும், சொந்தத்தில் முடியாவிட்டால் பிரயாண முகவர்களை, வேலைவாய்ப்பு ஏஜன்சிகளை நாடுவதுமே தமிழர்களின் இப்போதைய நாளாந்த முக்கிய அலுவல்களாக மாறி உள்ளன.

மூளைசாலிகள், இலகுவில் வேலைவாய்ப்புப் பெறக் கூடிய தொழில்சார்பினர் என்று குறிப்பிட்ட ஒரு வட்டத்தைச் சேர்ந்த கூட்டத்தினர் மட்டுமே வெளி நாடுகளுக்குப் பறக்கவில்லை.

இளைஞர்கள் என்றும் யுவதிகள் என்றும், தம்பதிகள் என்றும், நடுத்தர வயதினர் என்றும் பேரப்பிள்ளைகளைக் கண்ட மூத்தவர்கள் என்றும், மூப்பினர் என்றும் எல்லோருமே அக்கரைகளுக்குப் பறக்கவே ஆசைப்படுகிறார்கள்; ஆவலாய் உள்ளார்கள், அவசரப்படுகிறார்கள்; ஆலாய்ப் பறக்கிறார்கள்; அலுவல் பார்க்கிறார்கள்.

வெளிநாடு ஒன்றுக்குள் சட்டவிரோதமாகச் சென்று கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. இந்த நாட்டை விட்டுச் சென்றுவட வேண்டும் என்பது பலரின் விருப்பமாகி உள்ளது.

இந்தஅளவு கடந்த வெளிநாட்டு மோகத்துக்கு தமிழர் மனங்களை உந்தும் காரணங்கள் சில இல்லாமல் இல்லை என்பதை நாம் மனதில் கொண்டே ஆகவேண்டும்.

அந்தக் காரணங்களில் முதன்மையுற்று நிற்பது தமிழ்ப்பகுதிகளில் நிலவும் அரசியல் சூழ்நிலை. இந்த மண்ணிலேயே வாழ வேண்டும்: தமிழ் மண்ணுககே, அதன் உயர்ச்சிக்கே, வளத்துக்கே உழைக்க வேண்டும்: என்று உணர்வு பூர்வமாக உளம் விரும்பி இருந்தவர்கள் இலட்சியவாதிகளாய் இருந்தவர்கள் கூட இந்த மண்ணைவிட்டு அகன்றால்தான் சுதந்திரம், பாதுகாப்பு, நிம்மதி என்று எண்ணிச் சலிப்புறும் அளவுக்கு, அவர்களின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளும் அளவுக்கு அரசியல் சூழ்நிலை இருள் படிந்து கிடக்கிறது!

அரசியல் கோணிப் போனதால் பொருளாதாரம் நலிந்து, வேலைவாய்ப்பு அருகி மக்களுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகள் கிடைப்பதாயில்லை. அதன் நிமித்தம் நிதிவளம் பெருக்க, வயிற்றுப் பசி போக்க, ஏனைய வசதிகளை உண்டாக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடவேண்டிய நிர்ப்பந்தமும் தமிழ் மக்களுக்கு வயது வித்தியாசமின்றி ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழ் மக்களில் அனேகமானோர் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தினாலேயே வெளிநாடுகளை நாடவேண்டி உள்ளது என்பதனை ஏற்றுக் கொண்டாலும்—

கஷ்டங்கள், துன்பங்கள், நிர்ப்பந்தங்களை எதிர்நோக்கி, அவற்றுக்கு நேரிடையாக எதிர்நீச்சலடித்து மண்ணுக்கு உழைக்கவே, தனது சொந்த மண்ணில் வாழ்வதற்கே எந்தத் தேசாபிமானியும் விரும்புவான்.

தேசாபிமானம் வேரூன்றி வளர, இலட்சியப்பற்று அவசியம். அந்த இலட்சியங்களை அடைவதில் இடையூறு உண்டானால் அவற்றைத் தாங்கிக் கொள்ளவும், அவற்றைக் களையவும் மனோவலிமை தேவை,

மனோவலிமை இல்லாமையால்தான் தமிழனுக்கு இந்தக்கதி நேர்ந்தது. மனோவலிமையை நிலைப்படுத்த மக்கள் ஒற்றுமை மிக அவசியம். அதுவும் தமிழர்களிடம் கிடைக்காத சரக்காச்சே!

எது எப்படியோ, எக்காரணத்தை முன்வைத்தேனும் வெளிநாடு செல்பவர்கள், அங்கு நிரந்தரமாக வாழ்பவர்கள், நாட்டுப் பற்றில்லாதவர்களாகவே கருதப்பட வேண்டியவர்கள். பிறந்த மண்ணுக்குத் துரோகம் இழைத்தவர்களாகக் கணக்கிடப்பட வேண்டியவர்கள்.

இளம் உள்ளங்கள் — இளைஞர்கள் — அந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றக் கூடாது. இன்னல்களையும், கஷ்டங்களையும் பொருட்படுத்தாது சொந்த நாட்டில் வாழ்ந்து உழைக்கும் மனோவலிமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## ஜலலபாத் முற்றுகை முறியடிப்பு காபூல் அரசு அறிவிப்பு

ஜலலபாத் மீது கெரில்லாக்கள் நடத்திய முற்றுகையை முறியடித்து விட்டதாக கம்யூனிஸ்ட் ஆதரவு காபூல் அரசு நேற்று அறிவித்தது.

நீண்டதூர ஏவுகணைகள் மற்றும் விமானத் தாக்குதல்களை நடத்தி கெரில்லாக்களை மலைப்பாங்கான பிரதேசத்திற்கு துரத்திவிட்டதாக காபூல் வானொலி தெரிவித்தது. (எ)

இ. ஜேர்மனி, மே. ஜேர்மனி ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து

## நான்கு நாடுகளை அதிரவைத்த மனிதன்உருவாக்கிய பூமியதிர்ச்சி!

### பூமியின் சமநிலையைப் பாதித்த சுரங்க வெடி

பொன், மார்ச்.14

கிழக்கு ஜேர்மனியில் உள்ள பொட்டாஷ் சுரங்கம் ஒன்றில் பாறைகளை உடைக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது.

நேற்று நண்பகலுக்கு பின்னர் பொட்டாஷ் பாறை ஒன்றை நிலத்துக்கு அடியில் வெடிமருந்து வைத்து தொழிலாளர்கள் தகர்த்தனர்.

அப்போது ஏற்பட்ட அதிர்ச்சி, பூகம்பமாக மாறி கிழக்கு ஜேர்மனி,மேற்கு ஜேர்மனி, ஆஸ்திரியா சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை உலுக்கிவிட்டது என்று அறிவிக்கப்பட்டது.

நான்கு கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. அவற்றில் ஒரு கிராமத்தில் 80 சதவீத வீடுகள் இடிந்து தரைமட்டமாகின.

வீதிகள்பிளந்ததால்போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

பூமியின் சம (Equili brium) நிலையைப் பாதிக்கும் அளவுக்கு அந்த வெடிமருந்துகள் வெடித்த சக்தி இருந்தது. பூமியதிர்ச்சியை அளக்கும் றிச்ரர் அளவையில் இந்த அதிர்ச்சியின் வேகம் 5.9 ஆக பதிவு செய்யப்பட்டது.

மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டது. 4 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அகதிகளாகினர்.

சம்பந்தப்பட்ட சுரங்கத்தினுள் இருந்த தொழிலாளர் பத்திரமாக இருந்தனர்.

ஆனால் வேறு இடங்களில் பலர் காயமடைந்தனர் என்று கிழக்கு ஜேர்மனியின் (ஏ. பி. என்.) செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (எ)

## தென் ஆபிரிக்க அரசின் ஜனாதிபதி பதவிக்கு போட்டி

கேப்டவுண், மார்ச் 14

தென்ஆபிரிக்கா அரசில் பதவிப்போட்டி ஏற்பட்டிருக்கிறது.

72 வயதான ஜனாதிபதி போத்தா சுவியில் இருந்து விலக மறுத்ததைத் தொடர்ந்து ஆளும் தேசியக்கட்சி அவரைப் பதவியிலிருந்து விலகும்படி கோரி தீர்மானம் நிறைவேற்றியது.

கட்சித் தலைவர் திரு. எச். டபிள்யு. கிளார்க் ஜனாதிபதியாவதற்கு ஆளுங் கட்சியின் அரசியற்குழு ஏகமனதாக ஆதரவு தெரிவித்துள்ளது.

2 மாதங்களுக்கு முன்னர் திரு. போத்தா மாரடைப்பு நோய்க்கு இலக்கானார். அதைத்தொடர்ந்து திரு. கிளார்க் கட்சித் தலைமைப் பதவியையும் பதில் ஜனாதிபதிப் பதவியையும் ஏற்றுக் கொண்டார்.

போத்தா சுகமடைந்து திரும்பியதும் மீண்டும் ஜனாதிபதிப் பதவியைஏற்றுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்தே அரசியல் நெருக்கடி உருவானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை டெலிவிஷனில்தோன்றி 'நான் பதவி விலகமாட்டேன். எனது பதவிக்காலம் முடியும் வரை பதவியில் இருப்பேன்' என்று திரு. போத்தா அறிவித்தார்.

ஆளும் கட்சியில் 138 எம். பிக்கள் உள்ளனர். நேற்று அவர்கள் கூடி 2 1/2 மணித்தியாலங்களாக அரசியல் நிலை பற்றி ஆராய்ந்தனர்.

ஜனாதிபதிப் பொறுப்பை திரு. போத்தாவிடமிருந்து ஏற்கும் நடவடிக்கைகள்பற்றிய பேச்சுவார்த்தைகளை திரு. போத்தாவுடன் நடத்தும்படி கட்சியின் தலைவர் திரு. கிளார்க்கை அரசியற்குழு பணித்திருக்கிறது. (எ)

இந்தியாவின் பாதுகாப்பு

## கடலோரக் காவற் படைக்கு விமானந் தாங்கிக் கப்பல்

சென்னை, மார்ச் 14

இந்தியாவின் கடலோரக் காவல்படைக்கு நவீன வசதி கொண்ட விமானந் தாங்கிக் கப்பல் ஒன்று வாங்கப்பட உள்ளது.

கடலோர காவல்படையின் டைரக்டர் ஜெனரல் எச். ஜோன்சன் இத்தகவலைத் தெரிவித்தார்.

விக்ரம் கப்பலில் வைத்து அவர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் மேலும் சொன்னதாவது;

கடலோரப் பகுதிகளை கண்காணிக்க கடலோரப் பாதுகாப்பு படை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு படையில் அவ்வையார், விக்ரம் ராணிசிந்தன், சித்தூர்சின்னு ரமாதேவி உள்பட 18 கப்பல்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

நமது நாட்டின் கடலோர பகுதியின் நீளம் சுமார் 21 லட்சம் மைல் இந்த பகுதிகளை கண்காணிக்கும் பணியில் கடற்பாதுகாப்பு படை ஈடுபட்டுள்ளது.

போர்க்காலங்களில் கடற்படையுடன் இணைந்துபோர்ப் பணியிலும் மற்ற சமயங்களில் அமைதிப்பணியிலும் ஈடுபட்டு வருகிறோம்.

சாதாரண காலங்களில் வெளிநாட்டில் உள்ளவர்கள் அத்துமீறலை தடுப்பதும்தான் எங்கள் பணியாகும்.

நமது கடற்பகுதியை கண்காணிக்க அதிகமான அளவு கப்பல்களும் தேவையாகிறது. விமானங்களும் சில கடற்பகுதிகளில் கள்ளக் கடத்தல் அதிகரித்து வருகிறது. அதை தடுக்க மேலும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

கடற்படையைப் போல பாதுகாப்பு படைக்கு போதுமான அளவு நவீன கருவிகள் கிடையாது. இப்போது வெளிநாட்டு உதவியுடன் நவீன கப்பல்கள் கட்டப்பட்டு வருகிறது. இதில் பல்வேறு வசதிளுடன் கூடிய ஹெலிக்கொப்டர் விமானங்களை தாங்க கூடியதாக இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நச்சு இரசாயன வாயுவுடன்

## நடுக்கடலில்கப்பல் வெடித்து 22 மாலுமிகள் மரணம்?

டோக்கியோ, மார்ச். 14

நச்சு இரசாயனப் பொருள்களை ஏற்றிச் சென்ற அல்பேனிய எண்ணைத் தாங்கி கப்பல் ஒன்று ஜப்பானில் இருந்து 60 மைல் தொலைவில் பசுபிக் கடலில் காணாமற்போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நடுக்கடலில் இக் கப்பல் வெடித்துச் சிதறியதாகவும் பின்னர் கப்பலுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்த 19 பிலிப்பீன்ஸ் மாலுமிகளும், 4 பிரிட்டிஷ் மாலுமிகளும் காணாமற் போய் விட்டனர் என்று பி. பி. சி. அறிவித்தது.

ஹெலிகொப்டர்கள் விபத்து நடந்த இடத்துக்குச் சென்று தேடுதலில் ஈடுபட்டன.

கப்பலில் கொள்கலன்களில் வைக்கப்பட்டிருந்த நச்சு இரசாயன வாயுக் கசிவினால் சூழல் பாதிக்கப்படலாம் என்று ஜப்பான் அரசு அச்சம் தெரிவித்துள்ளது. (எ)

## பலஸ்தீன தூதரகம் புதுடில்லியில்

பலஸ்தீன நாட்டின் தூதரகம் புதுடில்லியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் தூதரகத்தைத் திறந்து வைத்தார்.

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அரபாத் புதுடில்லி சென்றார்.

பிரதமர் காந்தியுடன் பேச்சுக்களை முடித்துக்கொண்டு அரபாத் டாக்கா சென்றார். (எ)

## நடிகை சுவப்னு தற்கொலை

சென்னை, மார்ச் 14

நடிகை சுவப்னு தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டார்.

'டிக், டிக்,டிக்', கடல் மீன்கள் உட்பட பல தமிழ் சினிமாப் படங்களில் நடித்தவர் சுவப்னு.

கடந்த 6 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் இவர் அறிவு மயங்கிய நிலையில் அப்பல்லோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். செவ்வாய் அதிகாலை இவர் மரணமானார்.

சுவப்னு காதலில் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

வவுனியா

## மக்கள் தொண்டர் படையில் சேர சிங்களவர்களும் விண்ணப்பம்

வவுனியா, மார்ச். 15

மக்கள் தொண்டர் படை அமைப்பின் கீழ் தற்போது வவுனியாவில் சுமார் 200 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது.

இந்திய அமைதிப்படையின் பிரதான முகாம் அருகிலேயே பயிற்சி முகாமும் அமைந்துள்ளது.

இருபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் சுமார் முப்பது சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் மக்கள் தொண்டர் படையில் சேர விருப்பம்தெரிவித்துவிண்ணப்பங்களை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் மக்கள் தொண்டர் படையினர் கடமையில் ஈடுபடுத்தப் படவுள்ளதாக மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆரம்பத்தில் வீதித் தடை பிரயாணிகளை முகாம்களில் சோதனை இடுதல் போன்ற கடமைகளிலேயே இவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் —

இத் தொண்டர்படையில் நூற்றுக்கு மேற்பட்ட யுவதிகளையும் சேர்த்து கடமையில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ச- 164)

### ஆலய அறிவிப்பு

வேலணை, மார்ச் 15

நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலய திருப்பணி வேலைகள்பொது சேவைகள் போன்றவற்றிற்கு ஏமாற்றுப் பேர்வழிகள்சிலர் நிதி வசூலிப்பதாகத்தகவல் கிடைத்துள்ளதாகவும் இப்படியான நிதி வசூலிப்புக்கு எவருக்கும் அதிகாரம் அளிக்கவில்லை என்றும் ஆலயத்தின் அறங்காவல் சபை தெரிவித்திருக்கிறது. (ச-167)

கிளிநொச்சி

## பொதுச்சேவைதொழிலாளர் பிரச்சினைகளை தீர்க்க முயற்சி

கிளிநொச்சி, மார்ச். 15

கிளிநொச்சிமாவட்ட பொதுச் சேவைத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முயற்சியில் ஈ. பி. ஆர். எல். எப். இன் தொழிற்சங்க நடவடிக்கைக் குழு ஈடுபட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொதுச் சேவைத் தொழிலாளர்கள் சார்பில் கிளிநொச்சி மாவட்ட பொதுச்சேவைத் தொழிற்சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த வாரம் வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட பொறுப்பாளருமான திரு. கே. என். கமலாசரனைச் சந்தித்துத் தமது நீண்ட காலப் பிரச்சினைகளை விளக்கியதுடன் மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது அவர்களது குறைபாடுகளையும் மகஜரையும் [illegible] மாகாணசபை அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சினதும், முதலமைச்சரினதும் கவனத்திற்கு கொண்டுவந்து மிகவிரைவில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக அவர் உறுதி அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்தே உரிய விபரங்களை திரட்டுவதில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தொழிற்சங்க நடவடிக்கைக்குழு இறங்கியுள்ளது. [இ]

## விஞ்ஞான ஆய்வுகூட கட்டடம்

அம்பாறை,மார்ச் 15

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டடத் தொகுதி அமைப்பதற் [illegible] நிதியுதவியாக நடைபெற்று வரு[illegible] (இ-14)

## கல்விப் பணிப்பாளராக சற்குணராஜா

மட்டக்களப்பு, மார்ச் 15

மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா வடக்கு—கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. சோமசுந்தரம் நியமனம் பெறவிருக்கிறார்.

மட்டக்களப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். எஸ். மனோகரன் மேலதிக கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வுடன் முல்லைத்தீவுக்கு இடம்மாற்றம்பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு பிரதம கல்வி அதிகாரிகளான திரு. க. தியாகராஜா,திரு.எஸ்.நவரத்தினராஜா ஆகியோர் முறையே திருமலை, வவுனியா மாவட்டங்களுக்கு மேலதிக கல்விப் பணிப்பாளர்களாகப் பதவிஉயர்வு பெற்றுள்ளனர். (இ-21)

## கிராமசேவை அலுவலரின் சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு விசாரணை

மட்டக்களப்பு, மார்ச் 15

பொலீஸ் விசாரணை, பிரேத பரிசோதனை, மரணவிசாரணை இன்றி உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்ட கிராம சேவை அலுவலரின் சடலம் மறுநாள் மீண்டும் குழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டு விசாரணையின் பின்பு அடக்கஞ்செய்யப்பட்டது.

முதலைக்குடா வாசியான எம். யோகராசா (36 வயது) என்பவர்தான் மேற்படி கிராமசேவை அலுவலராவர்.

இனந்தெரியாத நபர்களால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பதில் நீதிபதி திரு. க. நவரெத்தினராஜா முன்னிலையில்மரணவிசாரணை நடைபெற்றது.

விசாரணையின்பின்பு கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ21)

## யாழ் பஸ் நிலையத்தில் மூதாட்டியின்சங்கிலி அபேஸ்!

### நவநாகரிக வாலிபன் கைவரிசை

மண்டைதீவு, மார்ச். 15

பஸ்ஸைப் பிடிப்பதற்காக யாழ் பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு வயோதிப மாதுவின் சங்கிலியை இளைஞன் ஒருவன் பறித்தெடுத்துக் கொண்டு தப்பிச் சென்ற சம்பவம் திங்கட்கிழமை காலை யாழ். பஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெற்றது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:-

பல்லவராயன் கட்டு பகுதியிலுள்ள குமுழமுனை கிராமத்தைச் சேர்ந்த சின்னத்துரை செல்வம்மா (வயது 60) என்பவர் யாழ். நகரிலுள்ள தனது உறவினருடன் இரு நாட்கள் தங்கி விட்டு அவர்கள் கொடுத்த சங்கிலியோடு யாழ் பஸ் நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது இனம் தெரியாத நீலக் கால்சட்டை அணிந்த வாலிபன் ஒருவன் அவரிடம் வந்து தான் குமுழமுனையில் இருந்து வருவதாகவும் அப்பெண்ணுக்கு ஊரில் 4000 ரூபா வந்து இருப்பதாகவும் கூறினார்.

அதைப் பெற முத்திரை 200 ரூபாவுக்கு வாங்க வேண்டும் என்றும் சங்கிலியைத் தருமாறு கேட்டார்.

அதற்கு வயோதிபமாது மறுத்து சத்தமிடவே அந்த வாலிபன் சங்கிலியைப் பறித்தெடுத்துக் கொண்டு ஓடி விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச- 88)

## லியோ இரத்த தானம்

யாழ்ப்பாணம், மார்ச். 15

மானிப்பாய் கோவில் பற்று லியோ சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான வைபவம் மானிப்பாய் நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

வைபவத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி, மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும், மானிப்பாய் 'இல்ற்' மாணவர்களும் கலந்து கொண்டார்கள் (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
★ நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konica
Tudor Forte B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

15 - 03 - 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஜனாதிபதித் தேர்தல் மனு விசாரணை ஆரம்பமானது

கொழும்பு, மார்ச் 15

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு சம்பந்தமான விசாரணை பிரதம நீதியரசர் தலைமையிலான 5 நீதியரசர் குழு முன்னிலையில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

மனுதாரர் திருமதி பண்டாரநாயகா ஆரம்ப நாள் அன்று சமுகமளித்திருந்தார்.

திரு. பிரேமதாஸாவை ஜனாதிபதியாக தெரிவு செய்த தேர்தலை செல்லாது என்று அறிவிக்கும்படி தனது மனுவில் அவர் கேட்டிருக்கிறார்.

பயமுறுத்தல் காரணமாக சுதந்திரமான முறையில் தேர்தல் நடத்தப்படவில்லை என்பதே மனுதாரரின் வாதமாகும்.

முதல் நாள் விசாரணையின் போது ஜனாதிபதி பிரேமதாஸாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸி பூர்வாங்க ஆட்சேபனைகளை எழுப்பி வாதாடினர்.

விசாரணை தொடர்கிறது. (உ-எ)

## சலூனில் 'சேவ்' செய்ய ரஷ்ய நாட்டில் தடை!
### எயிட்ஸை தடுக்கும் முயற்சியாம்

மாஸ்கோ, மார்ச் 15

சோவியத் தலைநகர் மாஸ்கோவில் உள்ள சிகை அலங்கரிப்பாளர் நிலையங்களுக்குச் செல்லும் வாடிக்கையாளருக்கு முகச்சவரம் செய்வது தடை செய்யப்பட்டு உள்ளது.

சுத்தம் செய்யப்படாத சவரக் கத்தியால் ஷேவ் எடுப்பது, எய்ட்ஸ் நோய் பரவுவதற்கு இடமளிக்கும் என்பதாலேயே இந்த உத்தரவு விடுக்கப்பட்டிருக்கிறது என நகர பிரதம சுகாதார அதிகாரி வி. எஸ். விஞேகிரோதவா சொன்னர். (உ-எ)

## தடுப்புக்காவலில் உள்ள தமிழ்க் கைதிகளை விடுவிக்க இந்திய அரசு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 15

விசாரணை இன்றித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுமார் 135 தமிழ் இளைஞர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி இந்திய அரசு இலங்கையைக் கேட்டுள்ளது.

பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னவை இதுசம்பந்தமாக கொழும்பில் உள்ள இந்தியப் பதில் தூதர் நிருபம் சென் சந்தித்தார்.

அப்போதே இந்தியாவின் கோரிக்கை கையளிக்கப்பட்டது.

வெலிக்கடை சிறையில் 121 பேரும், நீர்கொழும்பு, போகம்பரை ஆகிய சிறைகளில் 14 பேரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் 20 பேர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

பெரும்பாலானவர்கள் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்தியத் தூதரக அரசியல் பிரிவுச் செயலாளர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். (உ-எ)

## அறிவித்தல்

1989 பங்குனி 18 ஆம் 19 ஆம் திகதிகளில் மேடையேற்றப்படவிருந்த

மலையில் வீழ்ந்த துளிகள்

(திருப்பாடுகளின்—காட்சி)

பின்போடப்பட்டுள்ளது என்பதை மிக வருத்தத்துடன் அறியத்தருகின்றேம்.

யாழ். திருமறைக் கலாமன்றம்

(C/1650)

## மரண அறிவித்தல்
### நவரத்தினம் நவநீதன்

செல்வன் நவரத்தினம் நவநீதன் 14-3-89 இல் அகால மரணமானர். இவர் நவரத்தினம் - பூபதி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் இரத்தினஇராசா (ஜீவன்), நவக்குமார், நவச்செல்வன் (கனடா) திருமதி நிர்மலா அரியராஜா, நந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கதிர்வேற்பிள்ளை அரியராஜாவின் (கனடா) மைத்துனரும், திரு. கந்தையா (விவசாய சேவைத் திணைக்களம், வவுனியா), திரு. இராஜரட்ணம் (விரிவுரையாளர், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி), திரு. இராமச்சந்திரன் (விவசாய போதனசிரியர் பம்பேமடு, வவுனியா) ஆகியோரின் மருமகனும், திரு, திருமதி சிவராஜா (பீப்ள்ஸ் றேட் அன் சப்ளையர்ஸ், 4ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு 11), திருமதி இலட்சுமி (வேலணை), திரு, திருமதி பாலக்குமார் (ஆசிரியை, வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வி. வேலணை) ஆகியோரின் பெருமகனும், திரு, திருமதி சபாரட்ணம், திரு, திருமதி செல்லத்துரை ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னரின் பூதவுடல் 16-3-89 வியாழக்கிழமை 2 மணிக்கு துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. நவரத்தினம்
77/4 புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

(9866)

## கண்டியில் 2 மாதங்களில் காணமற்போனேர் -19

கொழும்பு மார்ச் 15

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் கண்டி மாவட்டத்தில் இருந்து 19 இளைஞர், யுவதிகள் காணமற் போய்விட்டனர்.

அவர்களின் பெற்றேர் மற்றும் உறவினர்கள் இது சம்பந்தமாக கண்டி பொலிஸில் முறையிட்டிருக்கின்றனர். [ஒ-எ]

## ஜனதிபதி சட்டத்தரணி

கொழும்பு, மார்ச் 15

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திரு. எஸ். டபிள்யு பி. வதுகொடப்பிட்டிய ஜனதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார். ஒ-எ)

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மேசன் வேலைக்கென அதிகாலையில் வீட்டைவிட்டு சைக்கிளில் புறப்பட்டவர் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். இந்தச்சம்பவம் நேற்றுக்காலை தாவடியில் இடம்பெற்றது.

தாவடியில் வசிக்கும் முல்லைத்தீவு செம்மலையைச் சேர்ந்த செல்லத்துரை ரவிக்குமார் (வயது19) என்பவரே இவ்வாறு சூட்டுக்கு இலக்கானவராவார்.

தன்னுடன் சைக்கிளில் வந்த மற்றொரு நபருக்கு என்ன நடந்தது என்பதுபற்றி தமக்கு தெரியவில்லை என்று இவர் கூறுகிறர்.

முதுகிலும் நெஞ்சிலும் காயங்கள் ஏற்பட்ட நிலையில் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக இவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறர். (உ-10)

## உள்ளூராட்சித் தேர்தல் 87 வாக்காளர் இடாப்பின்படி

கொழும்பு, மார்ச் 15

உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தல்கள் 1987 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படியே நடத்தப்படும்.

ஒரே நாளில் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் கூறுகின்றன.

2 மாநகர சபைகள், 5 நகர சபைகள், 68 பிரதேச சபைகளைத் தவிர்ந்த ஏனையவற்றுக்கே தேர்தல் நடத்தப்படும் என்று தெரியவருகிறது. (உ-எ)

## ஈரோஸ் உறுப்பினர் கொலை; ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஈரோஸின் மன்னர் மாவட்டப் பொறுப்பாளரும், மற்றொரு உறுப்பினரும் மன்னர் மடுச் சந்தியில் வைத்து கொல்லப்பட்ட சம்பவத்தை ஈ. பி. ஆர். எல். எவ். வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

தமிழ் பேசும் மக்கள் அமைதி, சமாதானம், சுதந்திரம் ஆகியவற்றிற்கான போராட்டத்தில் முன்னேக்கிச் சென்றுகொண்டிருக்கும் இச்சமயத்திலும் குழிபறிப்புக்களும் கூடவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த வருடம் இதே இடத்தில் வைத்து எமது மத்திய குழு உறுப்பினர் தோழர் ஐயாவினதும் ஐந்து மன்னர் மாவட்டத் தோழர்களினதும் கொலைக்குக் காரணமாகவிருந்தவர்களே இதனையும் செய்துள்ளனர்.

இவர்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டியவர்கள்.

இக்கொலைச் செயலை ஈ. பி. ஆர். எல். எவ். மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

துயரத்திலாழ்ந்திருக்கும் 'ஈரோஸ்' இயக்கத் தோழர்களுக்கும், இறந்த தோழர்களின் குடும்பத்தினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேம். இத்தகைய கொலைகளுக்கு எதிராக ஐக்கியப்பட்டு போராட முன்வருமாறு சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேம். -இப்படி இவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (உ)

## லோகசபையில் பெரும் குழப்பம்

புதுடில்லி, மார்ச் 15

இந்திய லோகசபையில் நேற்று பெரும் குழப்ப நிலையும் அமளி துமளியும் ஏற்பட்டன.

இந்திரா காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திய நீதிபதிகள் குழு சமர்ப்பித்த அறிக்கை சம்பந்தமாகவே -

அரச தரப்பு, எதிர்த்தரப்பு எம். பிக்களிடையே குழப்பம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. சபை மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டுக் கூடியபோதிலும் நிகழ்ச்சிகளை ஒழுங்காகவும் அமைதியாகவும் நடத்த முடியவில்லை. (உ)

## இசை, நடனம் ஆசிரியர் பதவி

கொழும்பு, மார்ச் 15

இசை. நடன ஆசிரியர்களுக்கான புதிய நியமனங்கள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு நேர்முகப்பரீட்சையை நடத்தும்.

அதன் பின்னரே தகுதியானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

கல்விச்சேவை ஆணைக்குழு இது சம்பந்தமான முடிவை அண்மையில் எடுத்தது.

## தந்தையின் பிடிவாதத்தால் புத்திரிகள் இருவர் தற்கொலை!

புதுடில்லி, மார்ச் 15

புகையிலை போடும் வழக்கத்தைக் கைவிட தந்தை மறுத்தார்.

அதை விடுவதிலும் பார்க்க உயிரை விடுவதே மேல் என்று தன்னை வற்புறுத்திய மனைவி, மகள்மாருக்குத் தெரிவித்தார்.

மறுநாள் தந்தையான ரகுபீர் சிங் கோயிலுக்குச் சென்றர்.

32 வயதான மனைவி கிருஷ்ணு, 15 வயது மகள் மீனசிங், 12 வயது மகள் அஞ்சு ஆகியோர் தற்கொலை ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டு ஒரு போத்தல் கிருமிநாசினியை மூவரும் குடித்தனர்.

இரண்டு மகள்மாரும் உயிரிழந்தனர். மனைவி கடுமையான நிலையில் ஆஸ்பத்திரியில் இருக்கிறர்.

புதுடில்லி நகரின் கிழக்குப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. (ஒ-எ)

## இன்று கூட்டம்

குருநகர், மார்ச் 15

இன்று காலையில் இருந்து மாலை வரையிலான முழுநாள் கூட்டம் ஒன்றை யாழ் - சர்வோதயம் நடத்தவுள்ளது.

இதில் சர்வோதயத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் வேலைத்திட்ட ஊழியர்களுக்கான அறிவுறுத்தல் வழங்கப்பட இருக்கிறது (ஒ-51]

## மூளைக்காய்ச்சல்; இளைஞர் மரணம்

கரவெட்டி, மார்ச் 15

கட்டைவேலியைச் சேர்ந்த கந்தப்பு தவராசா (வயது 27) என்ற இளைஞர் மூளைக் காய்ச்சலினல் மரணமானர்.

மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த இவர் நேற்று முன்தினம் மரணமானர்.

படையினரால் கைதுசெய்யப்பட்டிருந்த இவர் அண்மையிலேயே விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-70)

## இளம்பெண் சுட்டுக் கொலை

கரவெட்டி, மார்ச் 15

துன்னலை தெற்கு தல்லியப்புலத்தைச் சேர்ந்த திருமணமான இளம் பெண் ஒருவர் மூத்தவிநாயகர் கோவிற் சந்தியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

உயிரிழந்தவர் வ[illegible]கம் யோகமலர் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளது. (உ-70)

## கலைப்பீட பரீட்சை 22இல்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பின் போடப்பட்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதல் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் 22 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலுள்ள மாணவர்கள் போக்குவரத்துச் சீரின்மையால் உரியகாலத்தில் வந்துசேர முடியாமல் இருப்பதைக் கருத்தில் கொண்டே பரீட்சை பின்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## பெர்னுட் புதிய தலைவர்?

கொழும்பு, மார்ச் 15

லங்கா சமசமாஜக் கட்சியின் புதிய தலைவராக திரு. பெர்னுட் சொய்சா தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் மரணமான [illegible] தலைவராக இருந்தார். (உ-எ)

## வேலூரில் 36 பெண்களுக்கு எயிட்ஸ் நோய்

வேலூர், மார்ச் 14

தமிழ்நாடு வேலூரில் 36 பெண்களுக்கு எய்ட்ஸ்நோய் பிடித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வட ஆற்காடு மாவட்ட பொலீஸ் அதிபர் திரு. என். அப்பாதுரை இத்தகவலை வெளியிட்டார்.

வேலூர் நகர், அதைச்சுற்றியிருக்கும் பகுதிகளைச் சேர்ந்த தகாத நடத்தையுள்ள பெண்களைப் பிடித்துப் பரிசோதனை செய்தபோதே எய்ஸ்ட்நோய் பீடிக்கப்பட்டவர்கள் விவரம் தெரியவந்ததாக அவர் குறிப்பிட்டார். (எ)

## ஜே.வி.பி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் தெரிவித்தன.

இதேசமயம் 1971 ஆம் ஆண்டில் தென்பகுதியில் ஜே. வி. பி. கிளர்ச்சி இடம்பெற்றபோது அதனை அடக்குவதற்குப் பின்பற்றப்பட்ட பாணியில் —

தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் முறையை முழு அளவில் விரிவுபடுத்த பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் ஆலோசித்து வருவதாகவும் சொல்லப்பட்டது. (உ-எ)

## அப்பாடா அந்தப் பதவி!

புதுடில்லி, மார்ச் 15

இலங்கைக்கான அடுத்த இந்தியத் தூதர் யார்?

அவரைக் கண்டுபிடித்து அனுப்புவதில் இந்திய அதிகாரிகள் அசாதாரண தாமதம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

யூகோஸ்லேவியாவில் உள்ள இந்தியத் தூதர் திரு. எல். எல். மல்ஹோத்ரா இலங்கைக்கு அனுப்பப்படுவார் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல் இலங்கைக்கு அனுப்பப்படும் தூதர், நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கக் கூடியவராக இருக்கவேண்டும் என்று இந்தியா இப்போது கருதுகிறதாம். (அ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஹரியற் செல்லா துரைசிங்கம்

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஹரியற் செல்லா துரைசிங்கம் காலமானர். அன்னர் காலஞ் சென்ற ஹூடல் துரைசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், செல்வராணி, இந்திராணி [சாமுவேல் & சன்ஸ்], மனேகரன், ஜீவராணி, சோதிராணி, ஜெயகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயநாதன், ஜிற்ரேந்திரன், நளினி, விஜயபாலன், ஜெயநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்-

அன்னரின் பூதவுடல் 54, 4ஆம் குறுக்குத்தெரு, இல்லத்திலிருந்து நல்லடக்க ஆராதனைக்காக 15ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
இந்திராணி – விஜயநாதன்
185, குருசோ வீதி,
யாழ்ப்பாணம். [9855]

### திருமதி கணபதிப்பிள்ளை தையல்நாயகி

வவுனியாவில் முதலியாராக இருந்த காலஞ்சென்ற திரு. கு. கணபதிப்பிள்ளை அவர்களின் மனைவி தையல்நாயகி 5-3-89 அன்று காலமானர். அன்னர் பரராசசேகரன், செகராசசேகரம், குமாரசேகரம், ஞானசேகரம், தயாளலெட்சுமி, கனகசேகரம், பாலசேகரம், கணேசரத்தினம் ஆகியோரின் தாயுமாவார்.

அன்னரின் பூதவுடல் 7-3-89 அன்று வவுனியாவில் அவர்களது குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. பரராசசேகரன்
பொன்னையா ஒழுங்கை
வண்ணர் பண்ணை வடமேற்கு,
யாழ்ப்பாணம். [10007]

### திரு. செல்லப்பா கணேசு

கொக்குவில் கிழக்கு முருகமூர்த்தி கோவிலடியில் வசிக்கும் [குளப்பிட்டி ஒழுங்கை] செல்லப்பா கணேசு 14-03-89 இல் சிவபதமடைந்துள்ளார்.

இவர் காலம்சென்ற செல்லப்பா பொன்னம்மா தம்பதிகளின் மூன்ருவது புத்திரனும், காலம்சென்ற செல்லையா சந்தனம் தம்பதிகளின் மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், ஸ்ரீ விக்கினேஸ்வரன் [யாழ். பல்கலைக்கழகம், I. D. P.], ஸ்ரீ ஜெயந்தி, ஸ்ரீ காந்தா [குவைற்], ஸ்ரீ வாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் 15-03-89 புதன்கிழமை [இன்று] காலை 10.00 மணிக்கு அன்னரின் இல்லத்திலிருந்து கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் மற்றும் யாபேரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம்.

தகவல்:
மனைவி, மக்கள்.
கொக்குவில் கிழக்கு,
குளப்பிட்டி. (10013)

### பொன்னுத்துரை தருமலிங்கம்

பொன்னுத்துரை தருமலிங்கம் காலமானர். இவர் இளைப்பாறிய புகையிரத இலாகா சிரேஷ்ட உத்தியோகத்தரும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், பரமு பொன்னுத்துரை கனகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரும், காலம் சென்ற மகேஸ்வரன் (கணக்காளர் சிங்கர் கம்பனி இரத்மலானை) கோணேஸ்வரன் (நோர்வே பல்கலைக் கழகம்) ரதீஸ்வரன் (தோமஸ்) சாந்திமதி (நோர்வே), நகுலேஸ்வரன் (நோர்வே பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை சிங்கராசாவின் (பரிசோதகர் வட பிராந்திய போக்குவரத்துச் சபை யாழ். சாலை) அன்புச் சகோதரரும், சாரதாவின் அன்பு மாமனரும், விசாகனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் 16.03-1989 வியாழக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு இல. 126/28 கச்சேரி, நல்லூர் வீதி, ரதீஸ்வரன் லேனிலுள்ள அன்னரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தருமலிங்கம் குடும்பத்தினர்
126/28, ரதீஸ்வரன் லேன்.
கச்சேரி நல்லூர் ரேட்,
யாழ்ப்பாணம். (9865)

இப்பத்திரிகைநியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினல் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இல் உள்ள அச்சகத்தில் 15-03 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org